# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 693/2025

| | |
|---|---|
| | Prosecution PW 1 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | நர்மதா |
| Father's Name | : | கண்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 08.10.2025

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் சஞ்சை நகர், 2 வது தெருவில் குடியிருந்து இல்லத்தரசியாக உள்ளேன். அசோக் குமார் எனது கணவர் ஆவார். அவர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 04.05.2024 ம் தேதி நான் எனது கணவருடன் எனது அம்மா ஊருக்கு கோவில் திருவிழாவிற்கு சென்றிருந்தோம். 09.05.2024 ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் வீட்டிற்கு வந்து பார்த்ததில் கதவு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது, பீரோ உடைக்கப்பட்டிருந்தது. துணிமணிகள் கலைந்து கிடந்தது. பீரோவில் வைத்திருந்த 1 பவுன் தோடு 1, 1 பவுன் செயின் 1, 1 பவுன் கை செயின் 1, 1 கிராம் 1, 1 1/2 மோதிரம் 1, 1 கிராம் மோதிரம் 3, வெள்ளி அரனா, கொலுசு, வெள்ளி தோடு ஆகியவைகள் திருடு போயிருந்தது. அக்கம்பக்கத்தில் விசாரித்தும்

நகைகளை கண்டுபிடிக்க முடியவில்லை. 16.05.2024 ம் தேதி அன்று கரூர் நகர காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 11.05.2025 ம் தேதி போலிசார் அழைத்ததின்பேரில் காவல் நிலையம் சென்று போலிசார் எதிரியை பிடித்துவிட்டதாகவும், எதிரி கொடுத்த வாக்குமூலத்தின்படி நகைகளை உருக்கி கட்டியாக மாற்றிவிட்டதாகவும் கூறினார்கள். காவல் நிலையத்தில் பார்த்த நபர் ஆஜர் எதிரிதான். பின்னர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நகை கட்டியை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள நகை கட்டியை நீதிமன்றத்தில் இருந்து வாங்கிச் சென்றதாகும். **நகை கட்டி உள்ள போட்டோ அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

எனது கணவர் காவல்துறையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 5 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து காவல் நிலையத்தில் 1/4 மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். எனது வீட்டில் நகை காணாமல் போனது 09.05.2024 அன்றே தெரியும் என்றால் சரிதான். காணாமல் போன நகைகளை போலிசார் தகவல் கொடுத்து அன்றைய தினமே 09.05.2024 அன்றே வீட்டிற்கு வந்து சோதனை செய்தார்கள் என்றால் சரிதான். 16.05.2024 அன்று நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வீட்டில் திருட்டு நடந்தால் உடனே காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். காணாமல் போன நகைகள் அளவு மாறுபாடு இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகே வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 எனது கணவர் மற்றும் அ.சா.3, அ.சா.4, பட்டியல் சாட்சி 5 ஆகியோர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். காணாமல் போன நகைகளுக்குன்டான ரசீது ஏதேனும் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்ட நகை கட்டியானது என்னுடையதுதான் என்று குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் சரிதான். புகாரில் என்ன விவரங்கள் உள்ள என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எனது வீட்டின் கதவு உடைக்கப்படவில்லை என்றாலும், பீரோ உடைக்கப்படவில்லை என்றாலும், அதிலிருந்த நகைகள் காணாமல் போகவில்லை என்றாலும் சரியல்ல. எனது புகாரிலும்,

போலிசார் விசாரணையிலும் எனது வீட்டின் பீரோ உடைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து எதிரியை போலிசார் அடையாளம் காட்டியதாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. நான் எதிரியை பார்க்கவில்லை என்றாலும், எனது கணவர் காவலர் என்பதால் அதன் அடிப்படையில் போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 693/2025

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | அசோக் குமார் |
| Father's Name | : | தனசேகரன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 08.10.2025

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் சஞ்சை நகர், 2 வது தெருவில் குடியிருந்து மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த 04.05.2024 ம் தேதி நான் எனது மனைவியுடன் எனது மாமியார் வீட்டிற்கு கோவில் திருவிழாவிற்கு சென்றிருந்தோம். 09.05.2024 ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் வீட்டிற்கு வந்து பார்த்ததில் கதவு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது, பீரோ உடைக்கப்பட்டிருந்தது. துணிமணிகள் கலைந்து கிடந்தது. பீரோவில் வைத்திருந்த 1 பவுன் தோடு 1, 1 பவுன் செயின் 1, 1 பவுன் கை செயின் 1, 1 கிராம் 1, 1 1/2 மோதிரம் 1, 1 கிராம் மோதிரம் 3, வெள்ளி அரனா, கொலுசு, வெள்ளி தோடு ஆகியவைகள் திருடு போயிருந்தது. அக்கம்பக்கத்தில் விசாரித்தும் நகைகளை கண்டுபிடிக்க முடியவில்லை.

16.05.2024 ம் தேதி அன்று கரூர் நகர காவல் நிலையம் சென்று எனது மனைவி புகார் கொடுத்தார். 11.05.2025 ம் தேதி போலிசார் அழைத்ததின்பேரில் காவல் நிலையத்திற்கு நானும், எனது மனைவி அ.சா.1 ம் சென்றோம். அங்கு போலிசார் எதிரியை பிடித்துவிட்டதாகவும், எதிரி கொடுத்த வாக்குமூலத்தின்படி நகைகளை உருக்கி கட்டியாக மாற்றிவிட்டதாகவும் கூறினார்கள். காவல் நிலையத்தில் பார்த்த நபர் ஆஜர் எதிரிதான். பின்னர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நகை கட்டியை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள நகை கட்டியை நீதிமன்றத்தில் இருந்து வாங்கிச் சென்றதாகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் காவல்துறையில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 5 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து காவல் நிலையத்தில் 1/4 மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். எனது வீட்டில் நகை காணாமல் போனது 09.05.2024 அன்றே தெரியும் என்றால் சரிதான். காணாமல் போன நகைகளை போலிசார் தகவல் கொடுத்து அன்றைய தினமே 09.05.2024 அன்றே வீட்டிற்கு வந்து சோதனை செய்தார்கள் என்றால் சரிதான். 16.05.2024 அன்று எனது மனைவி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் என்றால் சரிதான். வீட்டில் திருட்டு நடந்தால் உடனே காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். காணாமல் போன நகைகள் அளவு மாறுபாடு இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகே வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 எனது மனைவி ஆவார். அ.சா.3, அ.சா.4, பட்டியல் சாட்சி 5,6 ஆகியோர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். காணாமல் போன நகைகளுக்குன்டான ரசீது ஏதேனும் காவல் நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொண்ட நகை கட்டியானது என்னுடையதுதான் என்று குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் சரிதான். புகாரில் என்ன விவரங்கள் உள்ள என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எனது வீட்டின் கதவு உடைக்கப்படவில்லை என்றாலும், பீரோ உடைக்கப்படவில்லை என்றாலும், அதிலிருந்த நகைகள் காணாமல் போகவில்லை என்றாலும் சரியல்ல. எனது மனைவி கொடுத்த புகாரிலும், போலிசார் விசாரணையிலும் எனது வீட்டின் பீரோ உடைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில்

வைத்து எதிரியை போலிசார் அடையாளம் காட்டியதாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. நான் எதிரியை பார்க்கவில்லை என்றாலும், நான் காவலர் என்பதால் அதன் அடிப்படையில் போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 693/2025

| | |
|---|---|
| | Prosecution PW 3 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சிங்காரம் |
| Father's Name | : | முத்து |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 08.10.2025

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் ஆண்டாங்கோவில், கீழ்பாகம், சஞ்சை நகரில் குடியிருந்து அ.சா.2 வீட்டிற்கு அருகே டீக்கடை வைத்துள்ளேன். கடந்த 04.05.2024 அன்று அ.சா.1 ன் அம்மா வீட்டிற்கு குடும்பத்துடன் சென்றிருந்ததாகவும், 09.05.2024 ம் தேதி இரவு சுமார் 10.30 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்ததாகவும், அப்போது கதவு உடைக்கப்பட்டிருந்ததாகவும், பீரோ உடைக்கப்பட்டிருந்ததாகவும், பீரோவிலிருந்த 3 1/4 பவுன் நகை திருடுபோயிருந்ததாகவும் கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கேள்விபட்டதுபோல குற்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 693/2025

| | |
|---|---|
| | Prosecution PW 4 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சுந்தர்ராஜ் |
| Father's Name | : | கந்தசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 08.10.2025

**எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

எனது சொந்த ஊர் ஆத்தூர் ஆகும். நான் தற்போது ஆண்டாங்கோவில், கீழ்பாகம், சஞ்சை நகரில் குடியிருந்து அ.சா.2 வீட்டிற்கு அருகே மளிகைக்கடை வைத்துள்ளேன். கடந்த 04.05.2024 அன்று அ.சா.1 ன் அம்மா வீட்டிற்கு குடும்பத்துடன் சென்றிருந்ததாகவும், 09.05.2024 ம் தேதி இரவு சுமார் 10.30 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்ததாகவும், அப்போது கதவு உடைக்கப்பட்டிருந்ததாகவும், பீரோ உடைக்கப்பட்டிருந்ததாகவும், பீரோவிலிருந்த 3 1/4 பவுன் நகை திருடுபோயிருந்ததாகவும் கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கேள்விபட்டதுபோல குற்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**